**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.** 40/2018
Date: 04.08.2025.
வா.சா.1 - திருமதி. மேரி செலின்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பொதுவாக உண்மையான உரிமையாளரிடம் தான் சொத்து சம்மந்தமான அசல் ஆவணம் கைவசம் இருக்கும் என்றால், சரிதான். உரிமை மாற்றம் செய்தபிறகு அந்த உரிமை பெற்றவரிடம் அசல் ஆவணம் கொடுக்கப்படும் என்றால், சரிதான். ஆவண எண்.1013/1992 ஜோசப் சிறிலுக்கு நான் கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்த அன்றே நான் அனைத்து அசல் ஆவணங்களையும் ஜோசப் சிறிலிடம் கொடுத்துவிட்டேன் என்றால், சரியல்ல. அதனால் தான் என்னிடம் அசல் ஆவணங்கள் இல்லை என்றால், சரியல்ல, அசல் ஆவணங்கள் தவறி விட்டன. அவ்வாறு ஆவணங்கள் தொலைந்தது பற்றி நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அது சம்பந்தமாக நான் எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கிற்கு முன்பு தள்ளுபடி செய்யப்பட்ட அ.வ.எண்.143/2013 லும் அவ்வாறு ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்வில்லை என்றால், சரிதான். மேற்படி வழக்கிலும் அசல் ஆவணம் தாக்கல் செய்ய முடியாமல் நான் முதல் விசாரணை வாக்குமூலம் கூட தாக்கல் செய்யாத காரணத்தினால் தான் அந்த தள்ளுபடியாகிவிட்டது என்றால், சரியல்ல. நான் வழக்கிற்காக அசல் ஆவணங்கள் தொலைந்துவிட்டது என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அசல் ஆவணம் தொலைந்து போகவில்லை என்ற காரணத்தினால் தான் நான்

காவல் நிலையத்தில் புகாரோ, வேறு நடவடிக்கையோ எடுக்கவில்லை என்றால், சரியல்ல. 22.02.1992 முதல் ஜோசப் சிறில் வாங்கிய சொத்துகள் அனைத்தையும் அவர் தன் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. இன்றுவரை நான் தான் அனுபவிக்கிறேன். அவ்வாறு நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. 22.02.1992 ல் நான் எனது சகோதரருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தினை பற்றி 10.08.2011 அன்று தான் எனக்கு தெரியும் என்று வழக்கிற்காக நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. எனது சகோதரர் ஜோசப் சிறில் உடன் நான் நட்போடுதான் இருக்கிறேன் என்ற நிலையில், அவர் மோசடி செய்திருந்தால் அவ்வாறு நட்போடு இருக்க வாய்ப்புகள் இல்லை என்றால், மோசடி தெரிந்தபிறகு நட்பு இல்லை. எனது சகோதாரர் ஜோசப் சிறில் மோசடி செய்தது பற்றி பலமுறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறேன். அவ்வாறு புகார்களின் நகல் எதனையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இந்த விபரத்தை நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். ஜோசப் சிறில் மோசடி செய்யாத காரணத்தினால் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. உண்மையில் நான் பாறசாலை சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவணம் பதிவு செய்த அன்றே அசல் ஆவணங்களை ஜோசப் சிறிலிடம் கொடுத்துவிட்டேன் என்றால், சரியல்ல. அந்த கிரைய ஆவணம் போலியானது என்பதற்காக நான் எந்த நீதிமன்றத்திலும் வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால், நடவடிக்கை எடுக்க எனது வழக்கறிஞரிடம் கூறியிருக்கிறேன். நான் அவ்வாறு வழக்கிற்காக தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கில் 2 வது பரிகாரமாக சொத்தை மீட்டு எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறேன். அதுபற்றிய விபரங்களை வழக்கு பட்டிகையில்

குறிப்பிட்டிருக்கிறேன். வழக்கு பட்டிகையில் நான் அவ்வாறு நான் 3 அயிட்ட சொத்துகளை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. அ.வ.எ,ண.143/2013 ல் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த வழக்கில் நான் அவ்வாறு 3 பட்டிகை சொத்துகள் எண்கள் குறிப்பிடவில்லை. அது 345/1, 342/1, 322/13 . 322/13 ல் 6 சென்ட் மட்டும் தான் வழக்குபட்கையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், நம்பர் குறிப்பிடாமல் இதர சொத்துகள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். 22.02.1992 ல் எழுதின ஆவணத்திற்கு நான் 2018 ல் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். சுமார் 26 வருடங்கள் கழித்து தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், 2013 லியே வழக்கு போட்டேன். இந்த வழக்கு காலதாமதமான வழக்கு என்றால், சரியல்ல. முதல் பிரதிவாதி ஜெயசேகரன் வழக்கு சொத்தினை 2011 ல் வாங்கினார். தேதி தெரியவில்லை. ஆவண எண்.391/2011. முதல் பிரதிவாதி , 2 ம் பிரதிவாதியிடம் தகுந்த மறுபயன் கொடுத்து தான் சொத்தினை விலைக்கு வாங்கியுள்ளார் என்றால், நான் முந்தின ஆவணம் குறித்து தான் வழக்கு செய்கிறேன். 10.08.2011 ல் நடந்த கிரையத்தை பற்றி நான் 2018 ல் தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. 2011 ல் நடந்த கிரையத்தை பற்றி அ.வ.எண்.143/2013 ல் ஜெயசேகரனை கட்சி சேர்க்கவில்லை என்றால், சரிதான். சுமார் 7 வருடம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். எனவே இந்த வழக்கு காலதாமதமானது என்றால், சரியல்ல. நான் விலைக்கு கொடுத்தபிறகு எனது பெயரில் எந்தவித வருவாய் துறை ஆவணங்களும் இல்லை என்றால், சரியல்ல. பட்டா, கர ரசீதுகள் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் நீதிதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால், சரியல்ல. 1ம் பிரதி, தனது மனைவி 4ம் பிரதிவாதிக்கு வழக்கு பட்டிகை சொத்தில் 5 சென்ட் செட்டில்மென்ட் கொடுத்து அதில் அவர்கள் குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள் என்ற விபரத்தை நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–1 அசல் ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–1ன் நகலை 1999ல் நான் நகல் எடுத்திருக்கிறேன் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–6ல் சொத்துகளில் பிளாட் போட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதில் 1வது பிரதிவாதியின் பெயரும் அந்த பிளானில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அந்த எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோதே அந்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. இவ்வாறு விபரங்கள் அனைத்தையும் 2013 லேயெ எனக்கு தெரியும் என்றாலும் , அதனை மறைத்து நான் 2018ல் தெரியவந்ததாக வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–8 பட்டாவில் சொத்தின் உரிமையாளர் பெயர் இல்லை என்றால், ஜெராக்சில் தவறு ஏற்பட்டுவிட்டது. பட்டாவில் என் பெயர் உள்ளது என்று சாட்சி கூறுகிறார். எனது தகப்பனார் பெயர் குருசுமிக்கேல். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் நகல் மற்றும் ஒளிநகல் என்றாலும், அவற்றின் அசல் ஆவணங்களை நான் தாக்கல் செய்யாததால் அவற்றின் உண்மைதன்மையை நான் உறுதி செய்யவில்லை என்றால், சரிதான். போலியான நகல் ஆவணங்களை கொண்டு நான் இந்த வழக்கை நடத்துவதால் நான் பரிகாரம் எதுவும்

கோரமுடியாது என்றால், சரியல்ல. 7 வருடங்கள் பின்னிட்டு 1ம் பிரதிவாதியை கஷ்ட நஷ்ட படுத்த என்ற உள்நோக்கத்துடன் நான் இந்த வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.